நான் வேலையைத் தேடுவதா அல்லது ஒரு தொழிற்கல்வியை விரும்புவதா?

தன்னை ஒருசில வருடங்கள் ஈடுபடுத்தினால்- அதன் பலனை வாழ்வு முழுவதும் உணரலாம்

«நான் ஒரு கடையில் தொழில்கற்க ஏன் எனக்கு மொழி நன்கு தெரிந்திருக்க வேண்டும்? சுப்பர்மாக்கட் கடைகளில் காசுப்பபட்டடையில் வேலைக்கு உள்ளவர்களை அவதானித்துள்ளேன், அவர்களுக்கும் மொழி நன்கு தெரிவதில்லை.»

அல்லது: «ஏன் நான் கணிதம் கற்கவேண்டும் - அது எனக்கு இனிமேல் வாழ்க்கை முழுவதும் தேவைப்படாது. »

அல்லது: «தொழிற்கல்வியின்போது நான் குறைவான பணத்தை சம்பாதிப்பேன். »

ஒரு அடிப்படைத் தொழிற்கல்விக்கு அதிகமானவர்கள் இரண்டு, மூன்று வருடங்களை மூலதனமிடுகிறார்கள். அவர்கள் ஒரு தொழிலைக் கற்க விரும்புகிறார்கள், அவர்கள் ஒரு சாதாரணமான உதவித் தொழிலைப் பெற விரும்புவதில்லை.

ஒரு தொழிற்கல்வி கற்பதற்கு முடிவுசெய்வது, முழுமையான தொழில் வாழ்விற்கும் பலனளிக்கும். எது உங்களுக்கு முக்கியமானது? நீங்கள் எவ்வாறு முடிவெடுக்கப் போகின்றீர்கள்?

நான் முதலில் ஒரு தொழிற்கல்வியைக் கற்பேன்

நான் மொழியை நன்கு அறிந்துள்ளேன் அத்துடன் சிறந்த பொதுஅறிவைக் கொண்டுள்ளேன்.

நான் ஒவ்வொருநாளும் அதே வேலையை செய்யத் தேவையில்லை, எனக்கு மாறுதல்கள் இருக்கும்.

நான் குழுவில் சேர்ந்து கதைக்கலாம், சிலவேளைகளில் முடிவும் எடுக்கலாம்.

நான் பொறுப்பு வகிக்கின்றேன்

எனது மேலதிகாரிகள் என்னை மிகவும் நம்புகிறார்கள்.

எனது மேலதிகாரிகள் என் ஆர்வத்தை ஈடுபடுத்தினால் பாராட்டுகிறார்கள்.

நான் அதிகமாக எனது வேலையை சொந்தமாக செய்யலாம்.

எனக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது.

பகுதிநேரமாக வேலைசெய்தாலும், நல்ல வாழ்க் கைக்குத் தேவையானதை உழைப்பேன்.

எனக்கு புதியதைக் கற்கவேண்டுமென்றால், எனது வேலையிலிருந்து மாறிவிடுவேன்.

என்னால் எனது முன்னேற்றத்தைத் திட்டமிடவும் படிப்படியாக அதை நிறைவேற்றவும் முடியும்.

நான் மேலே தொடர்ந்து கற்கலாம்.

நான் விரும்பினால், என்னால் வேறொன்றை செய்ய முடியும், வேறு தொழிற்பகுதிக்கு மாறலாம், ஒரு புதிய தொழிற்கல்வியைத் தொடங்கலாம்.

நான் தொழிற்கல்வி இன்றி வேலை செய்கிறேன்

நான் விரைவாக பணம் சம்பாதிக்கிறேன்.

நான் ஒவ்வொரு நாளும் அதையே செய்கிறேன்.

எனது வேலை இலகுவானது, நான் அதை விரைவாகக் கற்றுக்கொண்டேன்.

ஒரு தொழிற்கல்வியைக் கற்றவர்களிலும் எனது வேலை உடல்ரீதியாக மிகவும் சிரமம் உள்ளது.

எனக்கு மிக அரிதாகவே சம்பள உயர்வு கிடைக்கிறது.

நான் வேலையை மாற்றினாலும், எனது சம்பளம் உயராது.

நான் வேலையை மாற்றினாலும், ஒரு விருப்பமான வேலையைப் பெற முடியாது.

ஏனைய அனைவரும் நான் என்ன செய்யவேண்டும் எனக் கூற முடியும்.

அதிகமாக எனக்கு சோம்பலாக உள்ளது.

நான் மேலே கற்க முடியாது ஏனென்றால் எனக்கு அடிப்படைத் தொழிற்கல்வி இல்லை.

நிறுவனத்தில் வேலை குறைந்தால் தொழிற்கல்வி கற்றவரை விட நான் விரைவாக வேலையிலிருந்து நீக்கப்படுவேன்.

நான் வேலை இழந்தால், ஒரு புதிய வேலையைப் பெறுவது மிகவும் சிரமம். கற்காதவர்களுக்கு தொழில் இடங்கள் அதிகமாக இருப்பதில்லை.